செ.வெ.எண்: 09/பிப்ரவரி நாள்: 04.02.2016

# செய்திக்குறிப்பு

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், இராமநாதபுரம் மாவட்டப் பிரிவின் சார்பாக தமிழ்நாடு மாநில அளவிலான பல்கலைக் கழகங்களுக்கு இடையேயான வாலிபால், இறகுப்பந்து, மேசைப்பந்து மற்றும் டென்னிஸ் விளையாட்டுப் போட்டிகள் 04.02.2016 முதல் 06.02.2016 வரை இராமநாதபுரத்தில் வைத்து நடைபெற்று வருகிறது. 04.02.2016 பிற்பகல் 2.00 மணிக்கு இராமநாதபுரம் செய்யதம்மாள் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற துவக்க விழாவில் திருச்சி பாரதியார் பல்கலைக் கழகம், அண்ணா பல்கலைக் கழகம், அண்ணாமலை பல்கலைக் கழகம், SRM பல்கலைக் கழகம், Hindustan பல்கலைக் கழகம், மதுரை காமராஜர் பல்கலைக் கழகம், சென்னை பல்கலைக் கழகம், அழகப்பா பல்கலைக் கழகம் ஆகிய 8 பல்கலைக் கழகங்களைச் சார்ந்த சுமார் 350 வீரர், வீராங்கணைகளின் அணி வகுப்பினை ஏற்று போட்டிகளை இராமநாதபுரம் பாராளுமன்ற உறுப்பினர் திரு.அ.அன்வர்ராஜா அவர்கள் போட்டிகளை துவக்கி வைத்துள்ளார்கள். வருகை தந்திருந்தவர்களை மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர்நலன் துறை அலுவலர் முனைவர்.க.சேவியர் ஜோதிசற்குணம் அவர்கள் வரவேற்றார்கள். நிகழ்ச்சியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய மதுரை மண்டல முதுநிலை மேலாளர் திரு.தமிழ்ச்செல்வன், செய்யதம்மாள் பொறியியல் கல்லூரியின் தாளாளர் திரு.செல்லத்துரை அப்துல்லா, கல்லூரி முதல்வர் முனைவர் மாரிமுத்து மற்றும் சிவகங்கை மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர்நலன் அலுவலர் திரு.இராம சுப்பிரமணியன், திருநெல்வேலி விளையாட்டு விடுதி மேலாளர் திரு.பெஞ்சமின் ஆகியோர் கலந்து கொண்டார்கள். அண்ணா பல்கலைக் கழகத்தின் சிறப்பு பார்வையாளராக திரு.பாலகணேஷ் அவர்களும் அனைத்து பல்கலைக் கழக உடற்கல்வி இயக்குநர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் ஏராளமான பார்வையாளர்கள் கலந்து கொண்டனர். போட்டிகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**